மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மக்களைக் கவரத்தக்க வகையில் எந்த, எந்தத் துறைகளை எல்லாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ அந்த அந்தத் துறைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: மதுவினுடைய தீமைகளைப்பற்றி எடுத்து விளக்கும் போஸ்டர்களை எல்லாம் மதுக்கடைகளுக்குப் பக்கத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்ற போர்டுகளை வைக்க வேண்டாம். மது அருந்திக் கஷ்டப்படுகிறவர்களைக் கடைகளின் அருகில் பார்த்தாலே அதன் தீமைகளை உணர்ந்து கொள்ளலாம்.

* 398 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state whether there are proposals under the consideration of the Government to enlist the services of religious heads for propagating prohibition?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். டென்னிஸ்: மதத் தலைவர்கள் இப்பணியில் ஊதியத்தை எதிர்பார்க்காமல் ஈடுபடுவார்கள். ஆகவே அரசு அவர்களது சேவையைப் பயன்படுத்திக் கொள்ள அவர்களை அழைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சேவை என்பது அவர்களாக முன் வந்து ஆற்ற வேண்டிய ஒன்று. கோரிப்பெறுவது அல்ல. அவர்கள் அதுபோன்ற சேவையில் ஈடுபடத்தாமே முன்வருவார்களானால், அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யும்.

* 399 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுவிலக்கு அமலுக்கு வருவதற்கு முன்பு, அரசு ஒரு ஆண்டிற்குப் பெற்று வந்த கலால் வரி எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இம்மாநிலத்தின் எப்பகுதியிலும் மதுவிலக்கு செயலில் இல்லாத காலத்தில், ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தில் 1945-46-ஆம் ஆண்டில் ஆயத்தீர்வை மூலம் கிட்டடிய மொத்த வருவாய் ரூபாய் 15.9 கோடி ஆகும். இதில் கன்னியாகுமரி மாவட்டம் தவிர, தற்போதைய தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களின் ஆயத்தீர்வை வருவாய் 1945-46-ல் ரூபாய் 9.46 கோடி ஆகும்.

திரு. கே. எ. வகாப் : மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு இப்போது வருகிற வருமானம் அரசு எதிர்பார்த்ததைவிட அதிகமாக இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.